2. பேரவைக்கு அளிக்கப்பெறும் மனுக்கள்.

குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் கோரிக்கைகள் குறித்து அச்சங்க மாநில ஒருங்கிணைந்த குழுவின் மனுவைப் பேரவைக்கு அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 276-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்கள் தற்போது பேரவைக்கு ஒரு மனுவை அளிப்பார்.

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத் தொழிலாளர் சங்க மாநில ஒருங்கிணைந்த குழு கன்வீனர் திரு. பி. கே. கெம்ப்ராஜ் மற்றும் திரு. ஏ. முகமது கவுஸ் ஆகியோர் கையொப்பமிட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்களின் அடிப்படைக் கோரிக்கைகள் நீண்டகாலமாகத் தீர்க்கப்படாமல் இருந்துவரும் ஐந்து முக்கியக் கோரிக்கைகள் அடங்கிய மனுவை நான் பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ரமணி அவர்களால் தற்போது பேரவைக்கு அளிக்கப்பட்ட மனுவின் சுருக்கத்தை உறுப்பினர்களுக்குப் பேரவைச் செயலாளர் அனுப்பி வைப்பார்.

3. சட்ட முன்வடிவுகள்.

(அ) இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்த) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளிகள் (திருத்தச்) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.